Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, FEBRUARY 22, 2024

வியாழக்கிழமை பெப்ரவரி 22, 2024 | ஒளி: 09 கதிர்: 198 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

# “இந்திய ரூபாவை எதிர்ப்போம்”

**ஜனாதிபதி ரணிலின் செயற்பாடுகள் வெற்றி பெற்றுள்ளது**


**‘எட்கா’ ஒப்பந்தம் கைச்சாத்திட விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது**



இந்தியாவின் ரூபாவை இலங்கையில் பாவிப்பதற்கும், இந்தியாவின் 29ஆவது மாநிலமாக இலங்கையை அடையாளப்படுத்துவதற்கும் நாட்டின் முக்கிய கேந்திர மையங்களான துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களை இந்திய நிறுவனங்களுக்கு வழங்குவது எடுக்கும் செயற்பாடுகளுக்கு நாங்கள் ஒருபோதும் ஆதரவு வழங்க போவதில்லை. மிகக் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்துவோம். என முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரும் அரச தரப்பு எம்.பியுமான சரத் வீரசேகர தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## தாமரை கோபுரம் சிவப்பாக ஒளிரும்



கொழும்பு- தாமரை கோபுரம் பெப்ரவரி 22ஆம் திகதி வியாழக்கிழமை சிவப்பு நிறத்தில் ஒளிரும் என கொழும்பு தாமரை கோபுரம் முகாமைத்துவ நிறுவனம் (தனியார்) லிமிடெட் தெரிவித்துள்ளது.

உலக மூளையழற்சி தினமான பெப்ரவரி 22ஆம் திகதியன்று விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலேயே இவ்வாறு ஒளிரவிடப்படவுள்ளது.

தொடர்ச்சி P2

## “நீதிமன்றம் சென்றால் எதிர்கொள்ள தயார்”



இந்தியாவின் மும்பையில் நான் ஆற்றிய உரை அரசியலைப்பை மீறியது , தேசத் துரோகம் என இந்த நாட்டை அழித்தவர்களில் முக்கியமான இருவர் கூறுகின்றனர் .இது தொடர்பில் அவர்கள் நீதிமன்றம் செல்ல முடியும். அவ்வாறு சென்றால் அதனை எதிர்கொள்ள நான் தயார் என சுற்றுலாத்துறை , காணி மற்றும் விளையாட்டுத்துறை

தொடர்ச்சி P2

## சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை

**சபாநாயகருக்கு சரியான அறிவுரைகளை வழங்குவது அதிகாரிகளினதும் பொறுப்பாகும்**



நிகழ்நிலை காப்பு சட்டம் இந்த சபையில் சட்டவிரோதமாக நிறைவேற்றப்பட்டது. இவ்வாறு நடக்க முடியாது சபாநாயகருக்கு சரியான அறிவுரைகளை வழங்குவது அதிகாரிகளினது பொறுப்பு. எனவே, இந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்யாவிட்டால் சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்படும் என எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



6 பொருட்களின்

## இறக்குமதி வரி அதிகரிப்பு

**கௌபி மற்றும் குரக்கன் இறக்குமதியை விவசாய அமைச்சின் பரிந்துரையின் பேரிலேயே மேற்கொள்ள வேண்டும்**

பல பொருட்களுக்கான இறக்குமதி விசேட பண்ட வரியை உயர்த்தி வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி, உளுந்து, பயிறு, கௌபி, சோளம், குரக்கன் மற்றும் தினை ஆகியவற்றின் இறக்குமதி விசேட பண்ட வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## பிரதம சாரணர்...

இலங்கையின் பிரதம சாரணர் என்றவகையில், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க 10ஆவது தேசிய சாரணர் ஜம்போரியை, புதன்கிழமை (21) ஆரம்பித்து வைத்தார். இலங்கை மற்றும் ஏனைய 28 நாடுகளைச் சேர்ந்த 11,500 சாரணர்களின் பங்குபற்றுதலுடன் தேசிய சாரணர் ஜம்போரி திருகோணமலையில் நடைபெறுகிறது.

மாகாண சபைகளுக்கான

## பொலிஸ் அதிகாரத்தை இரத்து செய்யும் சட்டமூலம் சமர்ப்பிப்பு

**தனிநபர் சட்டமூலத்தின் முதலாம் மதிப்பீட்டினை அங்கீகரிக்க வேண்டும்**



மாகாண சபைகளுக்கான பொலிஸ் அதிகாரத்தை இரத்து செய்யும் அரசியலமைப்பின் 22ஆவது திருத்தச் சட்டமூலத்தை பிவிதுறு ஹெல உருமய கட்சியின் தலைவரும் சுயாதீன எதிரணி எம்.பியுமான உதய கம்மன்பில தனிநபர் சட்டமூலமாக பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

பாராளுமன்றம் புதன்கிழமை (21) காலை 9.30 மணிக்கு பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் கூடியபோதே அந்த தனிநபர் சட்டமூலத்தை கம்மன்பில சமர்ப்பித்தார்.

தொடர்ச்சி P2

வடக்கு, கிழக்கில்

## 15 சதுர கிலோமீற்றரில் கண்ணிவெடிகள்

**கண்ணிவெடி அகற்றல் 2027 வரை நீடிப்பு**

கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளைக் கண்காணித்து வழிநடத்துவதற்காகத் தேசிய கண்ணிவெடி அகற்றல் செயற்பாட்டுத்திட்ட நிலையத்தை 2027 வரை பராமரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு அங்கிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## கடும் வறட்சியால் தேயிலை செடிகள் கருகின

■ ரஞ்சித் ராஜபக்ஷ

கடும் வறட்சியான காலநிலை காரணமாகத் தேயிலைத் தோட்டங்களில் தேயிலைச் செடிகள் கருகியுள்ளன. இதனால், தோட்டத் தொழிலாளர்களின் அன்றாட வேலைகளும் தடைப்பட்டுள்ளன.

மத்திய மலைநாட்டில் தற்போது நிலவும் கடும் வறட்சியான காலநிலையால் கினிகத்தேன மற்றும் நோர்வூட் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட பல தேயிலைத் தோட்டங்களில் தேயிலைச் செடிகள் கருகியுள்ளன.

தொடர்ச்சி P2



## “மனோவின் பிள்ளையார் சுழியை பிள்ளையார் கேட்டால் அழுவார்”

**யார் யாருக்கு வீடுகள் கொடுக்கப்பட்டன என்பது இங்குள்ள அரசியல்வாதிகளுக்கும் மக்களுக்கும் நன்றாகவே தெரியும்**



தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் “இந்த 10,000 வீட்டுத் திட்டத்துக்கு தான்தான் பிள்ளையார் சுழி போட்டேன்”என அறிக்கை விட்டிருந்தார். இதனைப் பிள்ளையார் கேட்டால் அவரே அழுவார். பெயர் போடும் அரசியல் செய்ய நான் வரவில்லை. நிரந்தர தீர்வுகளைப் பெறவே நான் அரசியலுக்கு வந்தேன் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (20) இடம்பெற்ற அமர்வில் பிணைப் பொறுப்பாக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டமூலம், நம்பிக்கைப்

தொடர்ச்சி P2

## “ஆறுமுகன் தொண்டமானின் ஆன்மா தான் அழுகின்றது”

**பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகளைப் பயன்படுத்திக்கொண்டு பொய் கூறப் பழகியுள்ளார்**



உண்மையில் பிள்ளையார் அழ மாட்டார். பிள்ளையார் என்றால் யார். அவர் கணேசன். அந்த பெரிய கணேசன் சொல்வதனைத்தான் இந்த சின்ன கணேசன் செய்கின்றார் எனறு பிள்ளையார் மகிழ்ச்சியடைகின்றார் அதுதான் உண்மை. நான் சொல்வதனை கேட்டுக்கொள்ளுங்கள் இந்த பொய், பித்தலாட்டம் பேசுகின்ற இந்த அமைச்சரின் நடைத்தையைக் கண்டு எனது நண்பர் ஆறுமுகன் தொண்டமானின் ஆன்மா தான் அழுகின்றது. அதுதான் உண்மையாகும் என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் எம்.பியுமான மனோ கணேசன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “இந்திய ரூபாவை எதிர்ப்போம்”

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (21) இடம்பெற்ற நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார.

மேலும் அவர் பேசுகையில், நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்து தற்போது ஓரளவு மீண்டுள்ளது என்பதையும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் செயற்பாடுகள் வெற்றி பெற்றுள்ளது என்பதையும், மக்களுக்கு பெரும் தடையாக இருந்த போராட்டங்கள் முடிவுக்கு வந்துள்ளதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பொருளாதார நெருக்கடிக்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு இந்தியாவுக்கு சாதகமான செயற்பாடுகளை முன்னெடுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. இந்தியாவின் ரூபாவை இலங்கையில் பாவிப்பதற்கும், இந்தியாவின் 29ஆவது மாநிலமாக அடையாளப்படுத்துவதற்கும், நாட்டின் முக்கிய கேந்திர மையங்களாக உள்ள விமான நிலையம் மற்றும் துறைமுகங்களை இந்திய நிறுவனங்களுக்கு வழங்குவதற்கும் எடுக்கும் செயற்பாடுகளுக்கு நாங்கள் ஒருபோதும் ஆதரவு வழங்கப் போவதில்லை. கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்துவோம். ஏனெனில், இவ்வாறான செயற்பாடுகள் நாட்டின் தேசிய பாதிப்பு நேரடியான அச்சுறுத்தல்களை ஏற்படுத்தும் என்றார். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான எட்கா ஒப்பந்தம் கைச்சாத்திட விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்தியாவில் 44 இலட்சம் பேர் தொழில் வாய்ப்பில்லாமல் இருக்கிறார்கள். அதேபோல் 2 இலட்சம் வைத்தியர்களும் , 15 இலட்சம் பொறியியலாளர்களும் தொழில் இல்லாமல் இருக்கிறார்கள். ‘எட்கா’ ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்டு இவர்களுக்கு இலங்கையின் தொழிற்றுறைகளை வழங்கினால் இலங்கையின் இளைஞர், யுவதிகளின் நிலை என்னவென்ற கேள்வி எழுப்பினார்.

# சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (21) விசேட கூற்றை முன்வைத்தே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

அரசியலமைப்பின் 123 (4) இன் பிரகாரம், ஏதேனும் சட்டமூலம் அல்லது ஏதேனும் சட்டமூலத்தின் ஏற்பாடுகள் அரசியலமைப்பிற்கு ஒவ்வாததாக உள்ளதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்ற விடத்து, அல்லது தீர்மானிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுமிடத்து, அத்தகைய சட்டமூலம் அல்லது அத்தகைய ஏற்பாடு உயர்நீதிமன்றத்தின் தீர்மானிப்பில் கூறப்பட்டுள்ள முறையில் தவிர,

நிறைவேற்றப்படுதல் ஆகாது என குறிப்பிடப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றம் வழங்கிய பரிந்துரைகள் மூலம் இச்சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும்.

நிகழ்நிலை காப்பு சட்டத்தின் 9 சந்தர்ப்பங்களில் உயர் நீதிமன்றம் வழங்கிய பரிந்துரைகளுக்கு முரணாக தமது சொந்த தேவையின் நிமித்தம் நிறைவேற்றும் செயலில் ஈடுபட்டனர். அவ்வாறான குறைபாடு ஏற்பட்டுள்ளதாக சபாநாயகரும் ஒப்புக்கொண்டார். நிகழ்நிலை காப்பு சட்டம் இந்த சபையில் சட்டவிரோதமாக நிறைவேற்றப்பட்டது. இவ்வாறு நடக்க முடியாது

சபாநாயகருக்கு சரியான அறிவுரைகளை வழங்குவது அதிகாரிகளினதும் பொறுப்பாகும். இந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்யாவிட்டால் சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்படும். எனவே இந்த குறைபாடுகளை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டும் என்றார்.

# பொலிஸ் அதிகாரத்தை இரத்து...

இதனை விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி எம்.பியான மொஹமட் முஸம்மில் வழிமொழிந்தார்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபைகளுக்கான பொலிஸ் அதிகாரத்தை முழுமையாக இரத்துச் செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தி உதய கம்மன்பில அரசியலமைப்பில் 22ஆவது திருத்தத்தை உருவாக்கும் வகையில் தனிநபர் சட்டமூலம் ஒன்றை 2023 ஜூன் மாதம் முன்வைத்தார்.

இதற்கமைய, அரசியலமைப்பின் 13இல் வழங்கப்பட்டுள்ள மாகாண சபைகளுக்கான பொலிஸ் அதிகாரத்தை இரத்து செய்யும் வகையிலான 22ஆவது திருத்தத் தனிநபர் சட்டமூலம் கடந்த 12ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டது.

இவ்வாறான நிலையிலேயே மாகாண சபைகளுக்கான பொலிஸ் அதிகாரத்தை இரத்து செய்யும் 22ஆவது அரசியலமைப்பு திருத்தச் தனிநபர் சட்டமூலத்தை உதய கம்மன் பில புதன்கிழமை (21) பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

52ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ், ஒரு தனிநபர் சட்டமூலம் பாராளுமன்றத்தில் பெறப்படும்போது, 52(3)ஆம் நிலையியற் கட்டளையின் பிரகாரம் அச்சட்டமூலம் அரசியலமைப்பிற்கு முரணாணதா மற்றும் 13 ஏற்பாடுகளிற்குட்படுகின்றதா என்பது தொடர்பாகச் சட்டமா அதிபரின் கருத்தை அறிந்து கொள்வதற்காக அச்சட்டமூலம் சட்டமா அதிபருக்கு ஆற்றுப்படுத்தப்படும். 52(3)ஆம் நிலையியற் கட்டளையின் பிரகாரம் சட்டமா அதிபர் தனது அவதானிப்புக்களை ஆறு வாரங்களிற்குள் பாராளுமன்றத்திற்குத் தெரியப்படுத்த வேண்டும். அச்சட்ட மூலத்திற்கான சட்டமா அதிபரின் அவதானிப்பினை பெற்றுக்கொண்டதன் பின்னர் 52(4)ஆம் நிலையியற் கட்டளையின் பிரகாரம் மூன்று மொழிகளிலும் வர்த்தமானி அச்சிடப்படுகின்றது. வர்த்தமானி வெளியிடப்பட்ட திகதி இருந்து 7 நாட்கள் கழிந்ததன் பின், சட்டமூலமானது, முதலாம் மதிப்பீட்டிற்காக 52(5) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் பிரகாரம் ஒழுங்குப் பத்திரத்திலே சேர்க்கப்படுகின்றது. பாராளுமன்றமானது தனிநபர் சட்டமூலத்தின் முதலாம் மதிப்பீட்டினை அங்கீகரிக்க வேண்டும். அது ஏற்றுக்கொள்ளப்பட்டு அனுமதி வழங்கப்பட்டதும், அச்சட்டமூலம் முதலாம் மதிப்பீடு செய்யப்பட்டு அச்சிடுவதற்குக் கட்டளையிடப்படுவதுடன், 52(6) நிலையியற் கட்டளையின் பிரகாரம் அறிக்கையிடும் பொருட்டுப் பொருத்தமான அமைச்சருக்கும் அனுப்பி வைக்கப்படும் அமைச்சரின் அறிக்கையானது, பாராளுமன்ற சபாபீடத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, சட்டமூலத்தின் மீது 2ஆம் மதிப்பீட்டின் பின் சட்டமூலமானது சட்டவாக்க நிலையியற் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும் என்றார்.

# “மனோவின் பிள்ளையார் சுழியை....

பொறுப்பு பற்றுச்சீட்டுக்கள் (திருத்தச் ) சட்டமூலம் உள்ளிட்ட ஏழு சட்டமூலங்கள் மீதான இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

இந்திய அரசு மூலம் எமக்குக் கிடைத்த வீட்டுத் திட்டத்தைக் கடந்த 19ஆம் திகதி நாம் அமுல்படுத்தினோம். 43 வீட்டுத் திட்டங்களில் 1,300 வீடுகளை அறிமுகப்படுத்தினோம். இது 10,000 வீட்டுத்திட்டத்தில் முதல் கட்டம். இந்த திட்டம் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. அதில் நாம் கட்சி பார்த்து வீடு கொடுப்பதாகச் சிலர் கூறியிருந்தார்கள். ஆனால், நாங்கள் இன்னும் பயனாளிகள் பட்டியலையே. அறிவிக்கவில்லை. அறிவிக்காத பட்டியலுக்கு எப்படி கட்சி பார்த்து வீடு கொடுக்க முடியும்? அரசியல் கட்சி பார்த்து யார் யாருக்கு வீடுகள் கொடுக்கப்பட்டன என்பது இங்குள்ள அரசியல்வாதிகளுக்கும் மக்களுக்கும் நன்றாகவே தெரியும். இங்கு அமர்ந்திருக்கும் வேலுகுமார் எம்.பிக்கும் நன்கு தெரியும். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு வீடு கொடுக்குமாறு நான் கேட்கவில்லை. 2012-2019இல் புறக்கணிக்கப்பட்ட மக்களுக்கு வீடு கொடுங்கள் என்றுதான் கூறினேன். எனது கட்சிக்காரர்களுக்குக் கொடுங்கள் என்று கூறும் புத்தி எனக்கு கிடையாது.

பயனாளிகள் பட்டியலில் தோட்டத்திலுள்ள சேவையாளர்களுக்கு வீடு கொடுக்க வேண்டும் என்று பெருந்தோட்ட அமைச்சராக இருந்த ரமேஷ் பத்திரணவினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய அவர்களையும் நாம் உள்ளடக்கியுள்ளோம். அதுமட்டுமன்றி அங்கேயே படித்து சேவை செய்யும் ஆசிரியர்களுக்கு வீடு வழங்கக் கோரியுள்ளோம். மலையக கலைஞர்களுக்கும் வீடு கேட்டுள்ளோம்.

அடுத்ததாக தோட்டத்தில் வேலை செய்தால் வீடு கிடையாது. தோட்டத்தில் பிறந்திருந்தால்தான் வீடு என்ற கொள்கையை உருவாக்கினோம். 251,000 குடும்பங்கள் தோட்டத்தில் வாழ்கின்றன.இதில் 176,000 குடும்பங்களுக்கு வீட்டு பிரச்சினைகள் உள்ளன. இவ்வாறான நிலையில் தோட்டத்தில் வேலை செய்வது 115,000 நபர்கள் மட்டும்தான். தங்களுக்கு வீடு கிடைக்கவில்லையென வலப்பனையில் ஒரு போராட்டம் நடந்தது.

இந்திய அரசினால் கிடைத்துள்ள வீடுகளின் எண்ணிக்கை 14,000. முறையில் நாம் பகிர்ந்தளிக்க வேண்டும். 176,000 குடும்பங்களின் வீட்டு பிரச்சினையை இந்த 14,000 வீடுகள் தீர்க்கப்போவதில்லை என்றார்.

# “நீதிமன்றம் சென்றால் எதிர்கொள்ள தயார்”

இளைஞர் விவகாரங்கள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார். பாராளுமன்றத்தில் புதன்கிழமை (21) இடம்பெற்ற நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பான விவாதத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில், நான் இந்தியாவின் மும்பையில் ஆற்றிய உரை இங்கு திரிவுபடுத்தப்பட்டுள்ளது. நான் 15 நிமிடங்களுக்கு மேல் ஆற்றிய உரையில் ஒரு சில நிமிட உரை மட்டுமே இங்கு வெளியாகியுள்ளது. அதுவும் திரிவுபடுத்தப்பட்டுள்ளது. ஒன்லைன் என்றால் இதுதான் பிரச்சினை. எனது உரை திரிவுபடுத்தப்பட்டதன் மூலம் நிகழ்நிலை காப்பு சட்டம் எவ்வளவு அவசியமானது என்பது தெளிவாகியுள்ளது.

நான் இலங்கை இந்தியாவின் ஒரு பகுதி என்று கூறவில்லை. ஆனால், என்னை ஒரு கருவியாக பயன்படுத்தி சிலர் அரசியல் இலாபம் தேட முற்படுகின்றனர். அதில் இருவர் முக்கியமானவர்கள். அவர்கள் தான் ‘மகாதீர்’, ‘லீகுவான்’ ஆகியோரை கொண்டுவந்து நாட்டை அழித்தவர்கள்.

இலங்கை எப்போதும் இந்தியாவுக்கு நன்றிக்கடன் பட்டுள்ளது. இந்தியா தான் இலங்கையை காப்பாற்றி வருகின்றது. தற்போது கூட அதிகளவான இந்திய உல்லாசப்பயணிகளை இலங்கைக்கு அனுப்பி உதவுகின்றது. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் நெருங்கிய தொடர்புகள் உள்ளன. நாங்கள் இங்கு ‘ஆப்ப’ என்கின்றோம். இந்தியாவின் தமிழ்நாட்டில் கேரளாவில் ‘அப்பம்’ என்கின்றனர். நாங்கள் இங்கு ‘இடியாப்ப’ என்கின்றோம் அவர்கள் ‘இடியப்பம்’ என்கின்றார்கள்.

எமது மதமான பௌத்தமே இந்தியாவிலிருந்துதான் வந்தது. அதுமட்டுமல்ல, விஜயன் கூட இந்தியாவிலிருந்துதான் வந்தார். எனவே, இந்தியாவில் நான் ஆற்றிய உரை தொடர்பில் நான் குழப்பமடையவில்லை. இந்தியாவின் மும்பையில் நான் ஆற்றிய உரை அரசியலைப்பை மீறியது, தேசத்துரோகம் என இந்த நாட்டை அழித்தவர்களில் முக்கியமான இருவர் கூறுகின்றனர். இது தொடர்பில் அவர்கள் நீதிமன்றம் செல்ல முடியும். அவ்வாறு சென்றால் அதனை எதிர்கொள்ள நான் தயார்.

என்மீது குற்றம்சாட்டும் இருவரும் அப்பட்டமான திருடர்கள். அவர்கள் பற்றி எனக்கு அதிகமாகவே தெரியும். நான் போகும் வழியில் நின்று குரைக்கும் நாய்களுக்கு நான் கல் எறிய மாட்டேன். அவ்வாறு கல் எறிந்து கொண்டிருந்தால் எனது பயணம் முடியாது. அந்த நாய்களுக்கு எலும்புத்துண்டுதான் விருப்பம் என்பது எனக்கு தெரியும் அதனால் எலும்புத்துண்டுகளை வீசி விட்டு எனது பயணத்தை தொடர்வேன் என்றார்.

# “ஆறுமுகன் தொண்டமானின் ஆன்மா தான் அழுகின்றது”

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (21) இடம்பெற்ற நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பான விவாதத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

செவ்வாய்க்கிழமை நான் இந்த சபையில் இல்லாதபோது மலையக அமைச்சர் ஒருவர் என்னைப்பற்றி ஒரு பொய், பித்தலாட்டம் நிறைந்த உரையை ஆற்றிவிட்டுச் சென்று விட்டார். அவருக்குப் பதில் சொல்வது எனக்கு இழுக்கு. இருந்தாலும் கூட நாட்டுக்கும் சமூகத்திற்கும் உண்மை தெரிய வேண்டும் என்பதற்காக ஒன்று சொல்ல விரும்புகின்றேன்.

2017இல் எமது அரசாங்கத்தின் காலத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் நாம் கேட்டுப் பெற்றுக்கொண்ட 10,000 பெருந்தோட்ட வீடுகளுக்கான உறுதிமொழி 5 வருடங்களுக்குப் பிறகு திங்கட்கிழமை(19) இலங்கை அரசாங்கத்தால், அந்த அமைச்சரால் ஜனாதிபதியுடன் சேர்ந்து கொண்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதனையிட்டு மகிழ்ச்சிய டைகின்றோம். உண்மையில் பாருங்கள் நான் 10,000 இந்திய வீட்டுத்திட்டத்தை வாழ்த்தி வரவேற்கின்றோம் என்றுதான் கூறியிருக்கின்றேன்.

இப்படி இருந்து இங்கு வந்து அந்த மலையக அமைச்சர் , “மனோகணேசன் கூறுவதனைக்கேட்டு பிள்ளையார் அழுவார்” என்று கூறுகின்றார். காரணம் நான் இந்த திட்டத்திற்குப் பிள்ளையார் சுழி போட்டதாகக் கூறியதாக அவர் கூறுகின்றார். நான் அப்படிச் சொல்லவே இல்லையே. அது பொய், பித்தலாட்டம் என்ற அடிப்படையிலேயே அவர் பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகளைப் பயன்படுத்திக்கொண்டு பொய் கூறப் பழகியுள்ளார். பேசிப்பேசியே கொல்கிறார் பேசுவதைத்தவிர எதுவும் செய்வதில்லை. உண்மையதுதான் என்றார்.

அதுமட்டுமல்ல, 4,000 வீட்டுத்திட்டத்தை இதற்கு முன்னாலே ஆறுமுகன் தொண்டமான் இந்தியா அரசிடம் கேட்டுப்பெற்றமை உண்மைதான். அவர்கள் தான் அரசில் இருக்கின்றார்கள். நாங்கள் அமைச்சராக இருக்கவில்லையே? 40 வருடங்களாக மாறி மாறி வந்த ஒவ்வொரு அரசாங்கத்திலும் இவர்கள் தான் இருந்தார்கள். ஆனால் 2010இல் கேட்ட அந்த திட்டத்தைக்கூட நாம் வந்துதான் ஆரம்பித்து வைத்தோம் என்றார்.

# தாமரை கோபுரம் சிவப்பாக ஒளிரும்

இந்த பேரழிவு தரும் நரம்பியல் நிலை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த என்செபாலிடிஸ் இன்டர்நேஷனலின் தற்போதைய பணியின் ஒரு பகுதியாக இவ்வாறு செய்யப்படுகின்றது.

கொழும்பு - தாமரை கோபுரம் உலகெங்கிலும் உள்ள பல சர்வதேச அடையாளங்களுடன் இணைந்து இந்த இயக்கத்திற்கு ஆதரவளிக்கும்.

# இறக்குமதி வரி அதிகரிப்பு

உளுந்து கிலோ கிராம் ஒன்றுக்கு 200 ரூபாயாக இருந்த இறக்குமதி விசேட பண்ட வரி 300 ரூபாவாகவும், கௌபி, மற்றும் தினை ஆகியவற்றின் இறக்குமதிக்கு கிலோ கிராமுக்கு 70 ரூபாயாக இருந்த விசேட பண்ட வரி 300 ரூபாயாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோ கிராம் சோளத்ததுக்கு 25 ரூபாயாக விசேட பண்ட வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதுடன், சோளம், உளுந்து, கௌபி மற்றும் குரக்கன் இறக்குமதியை விவசாய அமைச்சின் பரிந்துரையின் பேரிலேயே மேற்கொள்ள வேண்டும் என்றும் இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கடும் வறட்சியால் தேயிலை செடிகள் கருகின

தேயிலைச் செடிகள் காய்ந்து, கருகி வருவதனால் தேயிலை உற்பத்தி குறைவடைந்துள்ளது. இந்நிலையில், பெருந்தோட்ட நிறுவனத்தினால் தமக்கு வழங்கப்பட்டு வரும் நாளாந்த வேலை நாட்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாகத் தோட்டத் தொழிலாளர்கள் கூறுகின்றனர்.

தற்போது நிலவி வரும் வறட்சியான காலநிலை காரணமாக தேயிலைத் தோட்டங்களைச் சுற்றியுள்ள பற்றைக்காடுகளுக்குச் சிலர் தீ வைத்துள்ளனர். தோட்ட பகுதிகளுக்கான நீர் ஆதாரங்கள் வற்றிவிட்டன. இதனால், குடிநீரைப் பெறுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகத் தோட்டத் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். அதுமட்டுமன்றி, பகல் மற்றும் இரவு வேளைகளில் கடும் வெப்பமான காலநிலை நிலவுவதால், தாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தோட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

# 15 சதுர கிலோமீற்றரில் கண்ணிவெடிகள்

2027ஆம் ஆண்டுக்குள் கண்ணிவெடிகள் இல்லாத நாடாக இலங்கையை மாற்றுவதற்கு இந்த ஒப்பந்தம் வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி, கண்ணிவெடி அகற்றும் பணியில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வரும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டு, திட்டத்தை மேலும் செயல்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டது.

தனி நபர் பாதிப்பு கண்ணிவெடி தடை உடன்படிக்கையின் (APMBC) பிரகாரம், 2028 ஜூன் 01ஆம் திகதிக்குள் இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் பணியை முடிக்க அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது.

ஜெனிவா சர்வதேச மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் மத்திய நிலையத்தின் ஆதரவுடன் கண்ணிவெடிகள் தொடர்பான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் 2023 முதல் 2027 வரை இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கை மூலோபாய வேலைத்திட்டத்தை தயாரித்துள்ளது. இதன் கீழ், நாட்டை கண்ணிவெடிகளில் இருந்து விடுவிக்க தேசிய மற்றும் சர்வதேச பங்குதாரர்களுடன் நெருக்கமாக பணியாற்ற அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

2002ஆம் ஆண்டு முதல் கண்ணிவெடி அகற்றும் வேலைத்திட்டம் நாட்டிற்குள் செயற்பட்டு வந்ததுடன், 2010ஆம் ஆண்டு ‘கண்ணிவெடி அகற்றல் தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம்’ ஆரம்பிக்கப்பட்டது. கடந்த காலங்களில் பல்வேறு அமைச்சுக்களின் கீழ் இயங்கிய இந்த நிலையம் தற்போது நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் மீள்குடியேற்றப் பிரிவின் கீழ் இயங்குகின்றது. இது கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்களை ஒருங்கிணைத்து, வழிநடத்துகிறது மற்றும் கண்காணிக்கிறது.

இலங்கை இராணுவம் நாட்டில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளுக்கு நேரடி பங்களிப்பை வழங்குகிறது மற்றும் அது இலங்கை இராணுவத்தின் மனிதாபிமான நிலக் கண்ணிவெடி அகற்றும் பிரிவு மூலம் செய்யப்படுகிறது. மேலும், Halo Trust மற்றும் Mag ஆகிய இரண்டு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களும் Dash மற்றும் SHAF ஆகிய இரண்டு உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களும் இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

நாட்டில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளுக்காக இலங்கை இராணுவத்தின் மனிதாபிமான தரைத்தள அகற்றல் பிரிவுக்கு அரசாங்கம் நிதி உதவி வழங்குகிறது. மற்ற 4 அரசு சாரா நிறுவனங்களுக்கு ஆண்டுதோறும் 17.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இந்த திட்டத்திற்கு ஆதரவை வழங்கும் சர்வதேச அமைப்புகளிடமிருந்து வழங்கப்படுகிறது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 204 சதுர கிலோமீற்றருக்கும் அதிகமான நிலப்பரப்பில் இருந்து தனி நபர் பாதிப்பு கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு பொதுமக்களுக்காக விடுவிக்கப்பட்டுள்ளன. மேலும், 15 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பில் கண்ணிவெடிகள் அகற்றப்பட உள்ளன.

2023 ஆம் ஆண்டு 5.2 சதுர கிலோமீற்றர் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டதாகவும், 18,064 தனி நபர் பாதிப்பு கண்ணிவெடிகள், 51 யுத்த கள கனரக தாங்கிகளை அழிக்க வல்ல கண்ணிவெடிகள் மற்றும் 15,070 வெடிக்காத குண்டுகள் மற்றும் தோட்டாக்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டதாகவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். பொதுமக்களின் மீள்குடியேற்றத்திற்காகவும் அவர்களின் வாழ்வாதாரத்திற்காகவும் காணிகள் விடுவிக்கப்பட்டதாக கண்ணிவெடி அகற்றல் தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

# “நீதிமன்றம் அறிவிப்பதில்லை”

சட்டமூலம் ஒன்று தொடர்பில் வியாக்கியானம் வழங்கும் அதிகாரம் உயர்நீதிமன்றத்துக்கு உண்டு. அதேவேளை, வழங்கப்படும் வியாக்கியானத்தை கட்டாயம் செயற்படுத்த வேண்டும் என்று நீதிமன்றம் பாராளுமன்றத்துக்கு அறிவிப்பதில்லை என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (21) ‘சட்ட உருவாக்க முறைமை, சட்டமா அதிபரின் செயற்பாடுகள் குறித்து எதிர்க்கட்சி எம்.பி.க்கள் முன்வைத்த கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், நீதியமைச்சை அல்லது ஒரு சட்டமூலத்தை சமர்ப்பித்த அமைச்சரைப் பிரதிநிதித்துவப்படுத்தி சட்டமா அதிபர் நீதிமன்றில் முன்னிலையாகுவதில்லை. நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தியே நீதிமன்றில் முன்னிலையாவார்.

அதேநேரம், பாராளுமன்றத்தின் நிலையியல் கட்டளைக்கு அமைய நீதிமன்றம் செயற்படாது. எனினும் அரசியலமைப்புக்கு வியாக்கியானம் வழங்கும் அதிகாரம் உயர்நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும் .சட்டமூலத்தின் அரசியலமைப்பின் வகிபாகத்தை தீர்மானிக்கும் அதிகாரம் நீதிமன்றத்துக்கு



வழங்கப்பட்டுள்ளமை முன்னேற்றகரமான செயற்பாடு.

உருவாக்கப்பட்ட சட்டவரைபின் அரசியலமைப்பின் செல்லுபடித் தன்மையை சட்டமா அதிபர் உறுதிப்படுத்தியதைத் தொடர்ந்து அமைச்சரவை அங்கீகாரம் வழங்கும். இதனைத் தொடர்ந்து, சட்டமூலம் வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்படும்.பாராளுமன்றத்தில் முதலாம் வாசிப்புக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலத்தை 14 நாட்களுக்குள் நாட்டு மக்கள் எவரும் உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்த முடியும்.

சட்டமூலம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் போது சட்டமூலத்தில் இவ்வாறு திருத்தங்களைக் கொண்டு வரலாம் என்று சட்டமா அதிபர் நீதிமன்றுக்கு யோசனைகளை முன்வைக்கலாம். இதனை நீதிமன்றத்துக்குக் கட்டளை பிறப்பிப்பதாகக் கருதக் கூடாது. சட்டமா அதிபர் முன்வைக்கும் திருத்த யோசனைகளை ஏற்பதற்கும் நிராகரிப்பதற்கும் நீதிமன்றத்துக்கு அதிகாரம் உண்டு.

தயாரிக்கப்படும் சட்டமூலத்தில் அரசியலமைப்பு வகிபாகம் தொடர்பில் தனது நிலைப்பாட்டைக் குறிப்பிடும் அதிகாரம் நீதிமன்றத்துக்கு உண்டு.

சட்டமூலத்தை சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றுவதா, மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றுவதா அல்லது சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்வதா என்பதை மாத்திரமே நீதிமன்றம் அறிவிக்க முடியும்.

அந்த அறிவிப்பைக் கட்டாயம் செயற்படுத்த வேண்டும் என நீதிமன்றம் பாராளுமன்றத்துக்கு அறிவிக்காது.

நீதிமன்றத்தின் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு அடுத்தகட்ட தீர்மானத்தை எடுக்கும் உரிமை 225 உறுப்பினர்களுக்கும் உண்டு. மக்கள் பிரதிநிதிகள் தவறான பக்கம் செல்லும் போது சரியான வழியைக்காண்பிப்பது நீதிமன்றத்தின் பொறுப்பாகும். எனவே, சட்ட உருவாக்க விவகாரத்தில் சட்டமா அதிபர் சட்ட உருவாக்க முறைமைக்கு முரணாகச் செயற்படவில்லை என்றார்.

### யாழ். பல்கலைக்கழக மாணவன்
# விபத்தில் மரணம்

■ டி.விஜித்தா



யாழ்ப்பாணம்-நீர்வேலி பகுதியில் செவ்வாய்க்கிழமை (21) இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் யாழ். பல்கலைக்கழக முதலாம் வருட மாணவனான மானிப்பாய்-வேம்படி பகுதியைச் சேர்ந்த ரமேஷ் சகீந்தன் (வயது 22) மரணமடைந்துள்ளார்.

தனது வீட்டில் இருந்து நீர்வேலி நோக்கி மோட்டார் சைக்கிளில் செவ்வாய்க்கிழமை (21) அதிகாலை பயணித்துக்கொண்டிருக்கும்போது நாயுடன் மோதியே இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மாணவன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மோட்டார் சைக்கிள் தீக்கிரை

■ நிதர்ஷன் வினோத்



யாழ்ப்பாணம் - காரைநகர் பகுதியில் செவ்வாய்க்கிழமை (20) இரவு வாள் வெட்டு வன்முறை கும்பலொன்று தீ வைத்து எரித்ததில் மோட்டார் சைக்கிளொன்று தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.


இச்சம்பவம் காரைநகர் - ஆலடிப் பகுதியில் இடம்பெற்றுள்ளதுடன், வன்முறை கும்பல் தப்பிச் சென்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### “ஜனாதிபதி ரணில் கூறும்
# பொய்கள் இந்த முறை வெற்றி பெறாது”

ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு “தமிழருக்கு அரசியல் தீர்வு” என்று கூறி வரும் ஜனாதிபதி ரணில் கூறும் பொய்கள் இந்த முறை வெற்றி பெறாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (20) இடம்பெற்ற அமர்வில் பிணைப் பொறுப்பாக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டமூலம், நம்பிக்கைப் பொறுப்பு பற்றுச்சீட்டுக்கள் (திருத்தச்) சட்டமூலம் உள்ளிட்ட ஏழு சட்டமூலங்கள் மீதான இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.



அவர் மேலும் பேசுகையில், மக்கள் தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடிகள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை. ஜனாதிபதி தேர்தலில் எவ்வாறு போட்டியிடலாம், யாரை வேட்பாளராகக் களமிறக்கலாம் எப்படி வெற்றி பெறலாம் என்பதில் மாத்திரம் விசேட கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதற்குக் கவனம் செலுத்தப்படவில்லை. தமிழ் மக்களின் நலன் கருதி சட்டமூலங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை. சர்வதேசத்தை ஏமாற்றுவதற்காகவே உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு என்பதொன்றை உருவாக்குவதாக அரசாங்கம் கூறுகின்றது. ஆனால், இந்த செயற்பாட்டை வடக்கு, கிழக்கு மக்கள் கடுமையாக எதிர்க்கின்றார்கள்.

ஜனாதிபதி தேர்தலை இலக்காகக் கொண்டு தமிழர்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காக ‘தமிழரின் அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு’ என்று தற்போது ஜனாதிபதி கூறுகின்றார். ஆனால், அதற்கான நடவடிக்கைகள் ஒன்று கூட முன்னெடுக்கப்படவில்லை.

வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுக்கு அவதானம் செலுத்துவதை விடுத்து. தமிழர் பிரதேசங்களில் சிங்கள பௌத்த ஆக்கிரமிப்புக்களை எவ்வாறு மேற்கொள்ளலாம் என்பதில் மாத்திரம் அவதானம் செலுத்தப்படுகிறது. ஜனாதிபதி செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் கிழக்கின் குச்சவெளி பகுதியில் உள்ள 4 விகாரைகளை பாதுகாக்க வேண்டும் என்று பேசப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஒரு இராணுவ முகாமுக்குள் பௌத்த விகாரையை நிர்மாணிப்பதற்கு ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. தமிழர்களோ, சிங்களவர்களோ வாழாத பகுதிகளில் கூட பௌத்த விகாரைகள் நிர்மாணிக்கப்படுகின்றன. வடக்கு, கிழக்கில் இராணுவத்தினர் வசமுள்ள காணிகளை விடுவிக்க ஜனாதிபதி உத்தரவு பிறப்பிக்கிறார். ஆனால், அந்த உத்தரவுகளைச் செயற்படுத்த முடியாது என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கூறுகின்றார். தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு அரசியலமைப்பின் ஊடாக நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். எமக்கான அரசியல் அதிகாரத்தை வழங்காமல் ஆட்சிக்கு வருவதற்குக் கூறும் பொய்கள் இந்த முறை வெற்றி பெறாது. தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இந்த ஆண்டு முன்னேற்றகரமான நடவடிக்கைகளை எடுக்காவிடின் தேர்தலில் அவர் தோல்வி அடைவது உறுதி என தெரிவித்துள்ளார்.

### “உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின்
# உள்ளடக்கத்தை எவரும் அறியவில்லை”

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் நீதிமன்ற விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, சட்டமா அதிபர் புதிய திருத்த யோசனைகளை முன்வைத்துள்ளார். இந்த திருத்த யோசனைகள் நாட்டு மக்கள் அறிந்து கொள்வதற்காக வர்த்தமானியில் வெளியிடப்படவில்லை. ஆகவே இந்த திருத்தத்தின் உள்ளடக்கத்தை எவரும் அறியவில்லை. ஆகவே, இது தவறானதொரு முன்னுதாரணம் என ஜே.வி.பி. தலைவரும் எம்.பியுமான அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (21) விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், சட்டமொன்று இயற்றப்படும்போது அதற்குப் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் அரசியலமைப்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. சட்ட வரைஞர் திணைக்களத்தினால் சட்டவரைபு தயாரிக்கப்பட்டு, சட்டமா அதிபரின் அனுமதியுடன் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படும். அந்த சட்ட வரைபுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கும்.

அதனைத் தொடர்ந்து நாட்டு மக்கள் அறிந்து கொள்வதற்காக சட்டமூலம் வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்படும். அதனைத் தொடர்ந்து முதல் வாசிப்புக்காக சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.அதன் பின்னர் நாட்டு மக்கள் எவரும் சட்டமூலத்தை உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்த முடியும்.

இவ்வாறான வழிமுறைகளைத் தொடர்ந்து வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சட்டமூலத்தையே உயர்நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும். உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் நீதிமன்ற விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, சட்டமா அதிபர் புதிய திருத்த யோசனைகளை முன்வைத்துள்ளார்.

இந்த திருத்த யோசனைகள் நாட்டு மக்கள் அறிந்து கொள்வதற்காக வர்த்தமானியில் வெளியிடப்படவில்லை. ஆகவே இந்த திருத்தத்தின் உள்ளடக்கத்தை எவரும் அறியவில்லை.ஆகவே இது தவறானதொரு முன்னுதாரணம்

சட்டமூலம் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலையில், சட்டமா அதிபர் புதிய திருத்த யோசனைகளை முன்வைப்பது சட்ட உருவாக்க வழிமுறைகளுக்கு முரணானது என தெரிவித்துள்ளனர்.



# இரட்டை கொலை: இருவர் கைது

■ றொசேரியன் லெம்பட்



மன்னார் - அடம்பன், முள்ளிக்கண்டல் பகுதியில் இருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


உயிலங்குளம் மற்றும் மன்னார் பகுதிகளைச் சேர்ந்த 33 மற்றும் 55 வயதுடைய இருவரும் செவ்வாய்க்கிழமை (20) மாலை கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

வயலுக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்காக மோட்டார் சைக்கிளில் கடந்த ஆண்டு ஓகஸ்ட் 24ஆம் திகதி பயணித்து கொண்டிருந்த இருவர் மீது மேற்கொள்ளப்பட்ட மீது துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பாகவே இவ்விருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் அடம்பன் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொண்டு வருவதாக தெரியவந்துள்ளது.

# இலஞ்சம் பெற்ற இருவருக்கு விளக்கமறியல்

■ ஆ.ரமேஸ்.



இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் போக்குவரத்து திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் இருவரை மார்ச் மாதம் 04ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நுவரெலியா மாவட்ட நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மத்திய மாகாண பொது போக்குவரத்து திணைக்களத்தைச் சேர்ந்த நுவரெலியா மாவட்டத்திற்குப் பொறுப்பான முகாமையாளர் ஒருவர் மற்றும் அதிகாரி ஒருவர், தனியார் பேருந்து ஒன்றுக்கு “C” தரம் அனுமதிப் பத்திரம் வழங்க 50,000 ரூபாய் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் அதிகாரிகளால் செவ்வாய்க்கிழமை (20) கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் நுவரெலியா மாவட்ட நீதிமன்ற நீதவான் பிரபுதிகா லங்காதினி முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது, நீதவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார்.

# பாம்பு தீண்டி கர்ப்பிணி மரணம்

■ எப்.முபாரக்



திருகோணமலை- மொரவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் செவ்வாய்க்கிழமை (20) பாம்பு தீண்டி மூன்று மாத கர்ப்பிணி உயிரிழந்துள்ளதாக மொறவெவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மொரவெவ - ஆறாம் வாய்க்கால் பகுதியைச் சேர்ந்த இமேஷா குமாரி என்ற 23 வயதுடைய கர்ப்பிணிப் பெண், மாடு கட்டுவதற்காகச் சென்றபோதே பாம்புக்கடிக்கு இலக்காகியுள்ளார்.

குறித்த பெண் மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதே உயிரிழந்திருந்ததாகவும், அவரது சடலம் பிரேதப் பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாமாவை கொன்ற மருமகனும் சம்பந்தியும்

■ ஷேன் செனவிரத்ன

மாமாவை கிரிக்கெட் மட்டையால் அடித்துக் கொன்றனர் என்ற குற்றச்சாட்டின் பேரில், மருமகனும் அவருடைய தந்தையும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பேராதனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முருதலாவ குருகம பிரதேசத்தில் வசிக்கும் தோட்டத் தொழிலாளியான 55 வயதுடைய மாரிமுத்து தர்மலிங்கம் என்பவரையே இவ்வாறு அடித்து கொலை செய்துள்ளனர்.

கொலை செய்யப்பட்டவரின் மகளைத் திருமணம் முடித்த கணவரே இந்தக் கொலையைச் செய்துள்ளதாகவும், கைது செய்யப்பட்ட மற்றைய நபர் சந்தேகநபரின் தந்தை எனவும் பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

கொலைச் சம்பவத்தில் கைதான 26 வயது இளைஞனிடம் இருந்து பிரிந்து செல்வதற்காகக் கொலை செய்யப்பட்டவரின் மகள் சட்டரீதியாக நடவடிக்கை எடுத்து கொண்டிருந்தவேளையில், சந்தேகநபர் தனது தந்தையும் மற்றும் ஒரு குழுவுடன் அவர்களது வீட்டின் முன் வந்து அடாவடித்தனமாக நடந்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.



சம்பவம் தொடர்பில் மேலும் இரு சந்தேகநபர்களை கைது செய்வதற்கான பொலிஸ் விசாரணைகள் இடம்பெற்று வருவதுடன், பேராதனை பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் விஜித் விஜேகோனின் பணிப்புரைக்கமைய குற்றப்பிரிவு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.

# சர்ச்சையை கிளப்பும் இந்தியாவின் 29ஆம் பிராந்திய சர்ச்சை

இலங்கையின் அரசியலில் அண்டைய நாடான இந்தியாவின் தலையீடு நேரடியாகவும், மறைமுகமாகவும் நீண்ட காலமாகப் பேணப்படுகின்றது என்பதை மறுப்பதற்கில்லை. கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல்களில் வெற்றி பெற்ற கட்சிகளுக்கு தமது தேர்தல் பிரசார பணிகளை முன்னெடுப்பதற்கான கருத்திட்டத்தை இந்தியாவின் நிறுவனங்கள் வகுத்திருந்ததாகக் கூட செய்திகள் பரவியிருந்தன.

இவ்வாறிருக்கையில், அண்மையில் தேசிய மக்கள் சக்தியின் முக்கிய பிரமுகர்கள் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டு திரும்பியிருந்ததைத் தொடர்ந்து, அவர்களின் செயற்பாடுகள் பற்றி பல்வேறு விமர்சனங்கள் இதர கட்சிகளால் மக்கள் மத்தியில் பரப்பப்படுகின்றதை அவதானிக்க முடிந்தது.

இவ்வாறான சூழலில், தற்போதைய அரசின் முக்கிய அமைச்சுப் பதவி வகிக்கும் ஹரீன் பெர்னான்டோ அவர்களும் அண்மையில், இலங்கையும் இந்தியாவின் ஒரு பகுதி எனும் வகையில் கருத்துத் தெரிவித்திருந்தமை, பாராளுமன்ற அமர்வுகளில் எதிர்த் தரப்பின் கடும் விமர்சனத்துக்கு ஆளாகியிருந்தது.

குறிப்பாக, இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பல உடைமைகள் இந்தியாவுக்கு நீண்ட கால குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளன. அண்மையில் முக்கிய விமான நிலையங்கள் மூன்று இந்தியாவின் அதானி குழுமத்துக்கு வழங்கப்பட்டிருந்தது. மின்சார உற்பத்தி தொடர்பான கட்டமைப்பு நிர்வகிப்புகளும் இந்தியாவுக்கு வழங்கப்படுவதற்கான முனைப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்நிலையில், அமைச்சர் பெர்னான்டோ ஆற்றிய உரை தொடர்பில் எதிர் தரப்பினர் எழுப்பிய கேள்விகளுக்கு, அரச தரப்பிடமிருந்து எவ்விதமான உறுதியான மறுப்பும் கிடைத்திருக்கவில்லை. அவ்வாறு கேள்வி எழுப்பியவர்கள் தமக்கு அரசியல் இலாபம் தேடுவதற்காக இவ்வாறான கருத்தை முன்வைத்தாரா அல்லது அவரின் கேள்விகளுக்குப் பதிலளித்து இந்தியாவின் எதிர்ப்பை தேடிக்கொள்ள வேண்டுமா எனும் சந்தேகங்களும் எழுகின்றன.

எவ்வாறாயினும், மக்களைத் திசை திருப்பி, இந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது காணப்படும் அதிருப்தியை தமது தேசப்பற்று நிறைந்த வார்த்தைகளால் மயக்குவதற்கான முயற்சிகளாகக் கூட கருத முடியும்.

நாடு வங்குரோத்து நிலையடைந்து, பொது மக்கள் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு வீதிகளில் நீண்ட வரிசைகளில் காத்திருந்து உயிரைக் கூட மாய்த்த காலப்பகுதியில், மக்களுக்காகக் குரல் கொடுக்க முன்வராமல், அஞ்சி ஒளிந்திருந்த சில அரசியல் தலைவர்கள், தேர்தல் நெருங்கி வரும் காலப்பகுதியில் இவ்வாறான மக்களைக் கவரும் உரைகளை ஆற்றுவது, தமக்கு அரசியல் இலாபம் தேடிக் கொள்ளவே என்பதை நாட்டு மக்கள் எந்தளவுக்குப் புரிந்து கொள்வார்கள் என்பது தெரியவில்லை.

நெருக்கடிகளுக்கு மத்தியிலும் மக்களின் நலனுக்காகக் கொள்வனவு செய்யும் மருந்துப் பொருட்களில் கூட தமது பணம் சம்பாதிக்கும் குணத்தை வெளிப்படுத்தியிருந்த இந்த அரசாங்கத்தின் அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்பட்ட போதிலும், அதற்குச் சாதகமாக வாக்களித்த அங்கத்தவர்கள் உள்ள இந்த பாராளுமன்றம் தானா நாட்டு மக்களின் தேவைகளுக்கு உண்மையாகக் கவனம் செலுத்தப் போகின்றது. இவ்வாறான நிலையில், இந்தியாவின் மற்றுமொரு பிராந்தியமாக இலங்கை அறிவிக்கப்பட்டால் தான் அதில் தவறு என்ன?




தமிழ்Mirror க்கு www.tamilmirror.lk

எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# சதுரங்க ஆட்டமாடும் இலங்கை தமிழரசுக் கட்சி

**முருகாநந்தன் தவம்**

இலங்கை தமிழரசுக் கட்சியின் புதிய தலைமையை மிரட்டி, அடி பணிய வைத்து, தாம் நினைக்கும் காரியங்களை நிறைவேற்ற, தமது ஆதரவாளர்களை பதவிகளில் அமர்த்த, அது முடியாமல் போனால், கட்சியின் செயற்பாடுகளை வழக்குகள் மூலம் ஒரு சில வருடங்களேனும் முற்றாக முடக்கி அதன் மூலம் தனது தோல்விக்கு பழிவாங்க கட்சிக்குள் 'தோற்றுப்போன' தரப்பு ஒன்று மேற்கொள்ளும் சதுரங்க ஆட்டமாகவே இலங்கை தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டுக்கு எதிரான நீதிமன்ற வழக்குத் தாக்கல்கள் அமைந்துள்ளன.

கடந்த ஜனவரி 21 மற்றும் 27ஆம் திகதிகளில் நடைபெற்ற இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச்சபைக் கூட்டங்கள் சட்டத்துக்கு முரணானது, செல்லுபடியற்றது. எனவே, குறித்த இரண்டு பொதுச்சபைக் கூட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்ட தெரிவுகள் சட்டத்திற்கு முரணானதும் செல்லுபடியற்றதுமென தெரிவித்து திருகோணமலையில் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதேபோன்று தமிழரசுக் கட்சியின் மாநாட்டை நடத்துவதற்கு எதிராக யாழ். மாவட்ட நீதிமன்றில் முல்லைத்தீவைச் சேர்ந்த ஒருவரினால் இன்னொரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு தொடரப்பட்ட வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, தமிழரசுக் கட்சியின் மாநாட்டுக்கு இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்குத் தாக்கல்களின் பின்னணியில்தான் 'தோற்றுப்போன தரப்பின்' சட்ட விளையாட்டுகள் இருப்பதாக உள் 'வீட்டு'த் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை தமிழரசுக் கட்சியின் புதிய தலைவரைத் தெரிவு செய்வதற்கான இரகசிய வாக்கெடுப்பு கடந்த ஜனவரி 21ஆம் திகதி திருகோணமலை நகர மண்டபத்தில் நடத்தப்பட்டு, அதில் சிவஞானம் ஸ்ரீதரன் தலைவராகப் பெரும்பான்மை வாக்குகளினால் தெரிவு செய்யப்பட்ட நிலையில், தலைவர் பதவிக் கனவுடனும் அனைத்து தகுதிகளையும் கொண்டவன் என்ற தலைக் கனத்துடனும் களமிறங்கியவர் அடைந்த எதிர்பாராத தோல்வி மற்றும் கடந்த ஜனவரி 27ஆம் திகதி திருகோணமலையில் இடம்பெற்ற இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவின்போது, தலைவர் பதவி நனவாகாத நிலையில், பொதுச் செயலாளர் பதவியையாவது அடைந்து விட வேண்டுமெனத் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டவர் மீண்டும் ஆசைப்பட்டு அதுவும் கிடைக்காத நிலையில், தனது விசுவாசியான திருகோணமலையைச் சேர்ந்த குகதாசனை பொதுச் செயலாளராக நியமிக்க வேண்டுமென மேற்கொண்ட சதிகள், குழிபறிப்புக்கள் கட்சியைப் பிளவு படுத்தும் காய் நகர்த்தல்கள் மத்தியில் குகதாசன் தெரிவு செய்யப்பட்டபோதும், அதற்குக் கிளம்பிய கடும் எதிர்ப்புக்களினால் இன்று வரை அவர் அந்த பதவியை ஏற்க முடியாத நிலை ஆகிய இரு காரணங்களின் பின்னணியிலேயே தற்போது இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்பது ஒன்றும் ரகசியமானதல்ல.

'தோற்றுப்போன' தரப்பின் விசுவாசிகளினால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக உள் 'வீட்டு'தரப்புக்களினால் கூறப்படும் இவ்வழக்கைத் தாக்கல் செய்தவர்கள், 'இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளராக ஜனவரி 27இல் தெரிவான குகதாசனையே நியமிக்க வேண்டும். பொதுச் செயலாளர் பதவிக்கு மீள் தெரிவு இடம்பெறக்கூடாது. அத்துடன், பொதுச் செயலாளர் பதவி பங்கிடவும் படக்கூடாது. இதற்கு கட்சியின் புதிய தலைமை இணங்கினால் வழக்குகள் வாபஸ் பெறப்படும். இல்லையேல் இன்னும் இன்னும் வழக்குகள் தாக்கல் செய்வோம்' என்ற முடிவில் இருப்பதாக தெரியவருகின்றது.

இலங்கை தமிழரசுக் கட்சிக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளில் ஒன்று, கட்சியின் யாப்புக்கு முரணாக பொதுச் சபையில் பலர் இடம் பெற்றிருந்தனர் என்ற குற்றச்சாட்டைக் கொண்டது. இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்து வழக்கைத் தாக்கல் செய்தவரும் அதனைத் தெரிந்து கொண்டே வாக்களித்த ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் அப்போது தனது விருப்பத்துக்குரிய தலைவர் வெற்றி பெறுவார் என்ற நம்பிக்கையில் வாக்களித்துள்ளார். ஆனால், அவர் எதிர்பாராதவிதமாகத் தோல்வியடைந்ததாலேயே இப்போது வழக்கைத் தாக்கல் செய்துள்ளார். தான் விரும்பிய தலைவர் வெற்றி பெற்றிருந்தால் கட்சியின் யாப்புக்கு முரணாக பொதுச்சபையில் பலர் இடம்பெற்றிருந்தனர் என்ற குற்றச்சாட்டை இவர் முன்வைத்திருக்க மாட்டார்.

இதனால்தான் இந்த வழக்குத் தாக்கல் சூழ்ச்சிகளின் பின்னணியில் 'தோற்றுப்போனவர்' இருப்பதாக தமிழரசுக் கட்சியின் தமிழ்த் தேசியத்தைப் பாதுகாக்கும் தரப்பு பகிரங்கமாகவே குற்றம் சாட்டுகின்றது. அதாவது இலங்கை தமிழரசுக் கட்சியை உடைக்கும், புதிய தலைமையைச் செயற்படவிடாது தடுக்கும், கட்சியின் பொதுச் செயலாளராகத் தனது விசுவாசியையே நியமிக்க வேண்டும் என விடாப்பிடியாக நிற்கும் தோற்றுப்போனவரின் நடிப்பில் உருவாக்கப்பட்டதே இந்த வழக்குகள் என்பதே தமிழ்த் தேசிய விசுவாசிகளின் குற்றச்சாட்டு.

வழக்கு தாக்கல் செய்தவர்களின் இந்த நோக்கம் அல்லது நிபந்தனை இலங்கை தமிழரசுக் கட்சியின் புதிய தலைமைக்குக் காற்றுவாக்கில் தெரிவிக்கப்பட்ட போதும், 'தமிழரசுக் கட்சிக்கு எதிரான 'உள் வீட்டு' சூழ்ச்சிகளை முறியடிப்போம். வழக்குகளைச் சந்திக்கத் தயார்' என கட்சியின் பெருந்தலைவர் இரா.சம்பந்தனும் புதிய தலைவர் சிவஞானம் ஸ்ரீதரனும் உறுதியாக இருப்பதனால். தமது நிபந்தனைகளை ஏற்காது விட்டால் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் தெரிவும் நீதிமன்ற சவாலுக்குட்படுத்தப்படும் என்ற மறைமுக மிரட்டல்களிலும் 'தோற்றுப்போன' தரப்பினர் ஈடுபட்டுள்ளதாகவும் 'உள் வீட்டு' தரப்புக்கள் தெரிவிக்கின்றன.

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள்ளும், வெளியிலும் பல சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அந்த சூழ்ச்சிகள் பற்றிப் புரிதல்களும் எமக்குத் தெளிவாக உள்ளன. 75 வருட கால அரசியல் பாரம்பரியத்தினைக் கொண்ட தமிழரசுக் கட்சிக்கு எதிராக தற்போது வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன. இந்த வழக்குகள் தொடர்பில் நீதிமன்றத்தின் ஊடாக கட்சி அதனை முறையாகக் கையாளுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அதேநேரம், கட்சியின் நிர்வாகம் தொடர்பில் புதிய தெரிவுகள் இடம்பெற்றுள்ளமையானது யாப்பு விதிகளுக்கு முரணானது என்றும் கூறப்பட்டுள்ளது. என்னைப் பொறுத்தவரையில், எனது தலைமைத் தெரிவு உட்பட கட்சியின் அனைத்து பதவி நிலைகளுக்கான புதிய தெரிவுகளையும் மீளவும் செய்வதற்கு நான் தயாராகவே உள்ளேன். விசேடமாகக் கட்சியின் மூலக்கிளை தெரிவுகளில் இருந்து அனைத்தும் மீள நடைபெறுவதாக இருந்தால் கூட அதனை ஏற்றுக்கொள்வதில் எனக்கு எவ்விதமான பிரச்சினைகளும் இல்லை. மேலும், தற்போது புதிய தெரிவுகள் சம்பந்தமான விடயங்கள் நீதிமன்றத்தின் தீர்ப்பிலேயே தங்கியுள்ளன. ஆகவே, நீதிமன்றத்தின் தீர்மானத்தினைப் பின்பற்றுவதற்கும் நான் தயாராக உள்ளேன்.

விசேடமாக, நீதிமன்றம் தெரிவுகள் தவறாக இருக்கின்றன என்று தனது தீர்ப்பில் சுட்டிக்காட்டுமாக இருந்தால் நீதிமன்றத்தின் மேற்பார்வையுடன் அதனை மீளச் செய்வதில் எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. எனவே, அனைத்து தடைகளையும் முறையாகக் கையாண்டு அவற்றைக் கடந்து எமது பாரம்பரிய அரசியல் கட்சியின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக தற்போது செயற்பட்டு வருகின்றோம் என தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள சிவஞானம் ஸ்ரீதரன் தெரிவித்துள்ளார்.

2010ஆம் ஆண்டு அப்போதைய தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவருமான இரா. சம்பந்தன் எடுத்த வரலாற்றுத் தவறான முடிவினால் அவர் இலங்கை தமிழரசுக் கட்சிக்குள் பற்ற வைத்த தீ இன்று தான் பற்றி எரிய அண்மையில் இரா.சம்பந்தன் எம். பி. பதவியிலிருந்து விலக வேண்டுமெனக் கோரியது. தற்போது சம்பந்தன் விதைத்த வினையின் விளைவாக அவரின் கட்சியையே அறுக்கத் தொடங்கியுள்ளது என்றே கூற வேண்டும்.

இதேவேளை, கடந்த வாரம் வடக்கிற்கு விஜயம் மேற்கொண்டிருந்த இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் புத்திஜீவிகள் உள்ளிட்ட சிலரைச் சந்தித்துக் கலந்துரையாடிய போது 'தமிழ் கட்சிகளின் பிளவு ஆபத்தானது. பிளவுகள் சரி செய்யப்பட்டு அரசியல் பயணங்கள் தொடர வேண்டும். தமிழ்க் கட்சிகளின் பிளவு வருத்தமளிக்கின்றது. இந்தக் கட்சிகள் மேலும் பிளவடையாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்' என்று வலியுறுத்தியிருந்தார். தமிழ் கட்சிகள் பிளவடைந்து முடிந்து தற்போது கட்சிக்குள் பிளவுகள் ஏற்படுத்தப்படுவதை அவர் அறியவில்லை போலும்.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் முச்சந்தியில் நிற்கும் நிலையில், இவ்வாறானதொரு நெருக்கடி தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும். தங்களின் தனிப்பட்ட நலன்களுக்கும் வறட்டு கௌரவங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்காது விட்டிருந்தால் இலங்கை தமிழரசுக் கட்சி இன்று ஸ்ரீதரன் தலைமையில் தலை நிமிர்ந்து நின்றிருக்கும். இந்தப் பிரச்சினையைச் சுமுக தீர்வு காணாது கௌரவப் பிரச்சினையாக, இரு அணிகளின் பிரச்சினையாக மாற்றினால் தந்தை செல்வா சொன்னதைச் சற்று மாற்றி, 'இலங்கை தமிழரசுக் கட்சியை இனிக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்' என்று கூறவே நேரிடும்.



## வாழ்வியல் தரிசனம்

தெருவில் சும்மா போகும் நாய்க்குக் கல்லால் எறிந்து, அதனுடன் விரோதிக்க வேண்டிய தேவையில்லை. எதிரிகளுடன் மட்டுமல்ல, எவருடனும் பகையை வளர்த்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

இந்தச் செயல்களால் ஏது நன்மைகள் கிட்டப்போகின்றன? பிடிக்காதவர்களுடன் வர்மம் காட்டக்கூடாது. அவர்களை உங்கள் பக்கம் ஈர்க்க, நட்பின் வழியைப் பின்பற்றுங்கள்.

கோபம், ஆணவத்தால் எதையும் சாதிக்க முடியாது; வெறுப்புதான் மிஞ்சும். துன்பங்களை உடைத்தெறிய, நெஞ்சில் அமைதியுடன் யாரையும் கனிவுடன் நோக்குவோம்.

உங்களது நியாயங்களை நிலைநிறுத்த, பிறரை விடாப்பிடியாக வற்புறுத்தத் தேவையில்லை. சொல்ல வேண்டிய விடயத்தில், 'நான்' என்ற மமதை கலக்கலாகாது. பணிவுடன் பேசுவதே நிரந்தர வெற்றிக்கு வழிவகுக்கும்.

மனிதனுடன் மட்டுமல்ல; மிருகங்கள், பட்சிகள் என அனைத்து உயிர்களிடமும் பாசத்துடன் நோக்கினால், அவைகள் உங்களுடன் உறவாகி விடும். இந்த உண்மையைச் செயலில் காட்டுங்கள். அனுபவம் மூலம் உணர்வீர்கள்.

கர்வம், அகங்காரம் என்பவை தேகத்தின் நலனுக்கும் கேடானவை; பதற்றம் வேண்டாம்; சாந்தியுடன் நெஞ்சத்தை வைத்திருங்கள். கடவுளை நம்பும் நாம், அனைவருக்கும் பிடித்ததைச் செய்வதே மேன்மை.

நன்றி–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### வீதிகளை புனரமைத்து தாருங்கள்


கிளிநொச்சி - பூநகரி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு, பொன்னாவெளி, பாலாவி ஆகிய கிராமங்களுக்கான பிரதான வீதி இதுவரை சொப்பனிடப்படாததால் மக்கள் போக்குவரத்தில் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி - பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வலைப்பாடு, வேரவில், பொன்னாவெளி, கிராஞ்சி, சிவபுரம் ஆகிய ஐந்துக்கும் மேற்பட்ட கிராமங்களுக்கான ஒரே ஒரு பாதையாகக் காணப்படுகின்ற பல்லவராயன் கட்டுச் சந்தி வேரவில் வரையான சுமார் 12 கிலோ மீற்றர் வரையான வீதி சுமார் 45 வருடங்களுக்கு மேலாகப் புனரமைக்கப்படாமல் காணப்படுகிறது. அவசர நோயாளிகளை வைத்தியசாலைகளுக்குக் கொண்டு செல்வதற்கு பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை, இந்த வீதியானது நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாமையினால் குறித்த பிரதேசத்திலிருந்து சிகிச்சைக்காகக் கொண்டு செல்லப்பட்ட நோயாளிகள் பலர் இடைநடுவில் உயிரிழந்ததாகவும் கிராமவாசிகள் தெரிவித்துள்ளனர்.

- யது பாஸ்கரன்





# மூக்குத்தி



இரா.சிவலிங்கம்

மாலை நான்கு மணியிருக்கும் மழை இலேசாகத் தூறிக் கொண்டிருந்தது. தோட்டத்து ஆத்து கிரவுண்டில் எல்லா சிறுவர்களும் விளையாடிக்கொண்டிருந்தார்கள். எல்லா துன்பங்களையும், பிரச்சினைகளையும், வேதனைகளையும் மறந்து புட்போல் விளையாடும் இவர்களுக்கு பொழுதுபோக்கே இதுதான். வீட்டில் எது இருக்கின்றதோ இல்லையோ ஆனால், விளையாட்டு மட்டும் தினமும் இருக்கும்.

விளையாட்டு மிக உற்சாகமாக சென்றுகொண்டிருந்தது. அப்போது ஆற்றங்கரையில இருந்து ஒரு குரல் ஒழித்தது. “ஏய் தம்பி இங்க வாடா... ஏய் ஒன்னத்தான்டா இங்க வா...” இது அங்கு விளையாடிக்கொண்டிருக்கும் மனோவின் தாய் மகனைக் கூப்பிடுகின்றாள். விளையாட்டு ஆர்வத்தில் மனோவிற்கு காதில் அது விளங்கவில்லை. மனோவின் தாய் தோட்டத்து வேலையை முடித்துவிட்டு வந்து மனோவை ஏதோ அவசரமாக கூப்பிடுகின்றாள்.

“ஏம்மா? வெளையாடிக்கிட்டுத்தானே இருக்கேன். ஏம்மா? கொஞ்சம் நேரம் வெளையாடிட்டு வரேம்மா?” “ஏய் நீ வரப்போறியா இல்லையா?” தாயின் அதட்டலைக் கேட்டு மனமில்லாமல் ஏதோ முனுமுனுத்துக் கொண்டே ஓடி வருகின்றான். “என்னம்மா சொல்லு... நா வெளையாடப் போகனும். வீட்டுக்கு வா சொல்றேன்...” தாயும் மகனும் நடக்கின்றனர்.

“ஏய் தம்பி நீ போய் அம்மாயிகிட்ட (மனோவின் அம்மாவின் அம்மா) சல்லி இருந்தா வாங்கிட்டு வா? வீட்டில ஒன்னுமோ இல்ல...” “நீ என்னம்மா எந்தநாளும் இப்படித்தான் சொல்ற...” “போடா தம்பி இப்ப போனாத்தான் ஆறரை மணிக்கு சரி வரமுடியும்...” மனத்தின் வீட்டிலிருந்து கிட்டத்தட்ட நாற்பத்தைந்து நிமிடத் தூரம். மனோ தண்ணியை மோந்து மடக் மடக்கனு குடித்துவிட்டு அம்மாயி இருக்கும் கல்லுமலை தோட்டத்தை நோக்கி ஓடுகின்றான்.

மனோ ஐந்தாம் வகுப்பு படிக்கின்றான். மெலிந்த உடம்பு, கை, கால், எல்லாம் சூம்பி போய் மிகச் சிறியவனாக காட்சியளிக்கின்றான். முகத்தில் மட்டும் ஒரு தெய்வீக கலை. வறுமையிலும் முகம் செழிப்பாக இருக்கும். வறுமையின் கோரப்பிடியில் வாழும் மனோவிற்கு ஒரு தங்கை, தகப்பனும், தாயும் தோட்டத்தில் வேலை. ஆனால், அவர்கள் இருவரினதும் வருமானத்தில் மட்டுமே வாழ்க்கை ஓடுகின்றது.

அவர்களின் வருமானத்தில் என்னத்தான் மிச்சம்? பிடித்து வைத்தாலும் சில நாட்கள் பட்டினிதான். அம்மாயிகிட்ட சல்லி வாங்கச் சொல்லுவது இது முதல் தடைவையல்ல. இந்த மாதிரி பல முறைகள் ஓடியிருக்கின்றான். வீட்டில் நடக்கத் தொடங்கிய மனோ முனியாண்டி கோயில் வரை சென்று, முணியாண்டி சாமியை கண்டதும், “சாமி கடவுளே, இன்னைக்கு எப்படியாவது சல்லிக் கெடைக்கனுமுனு” அந்த பிஞ்சு மனசு வேண்டிக்கொண்டு, அங்கிருந்த மண்ணை நெத்தியில் தொட்டு வைத்துக்கொண்டு, அந்த ஸ்டோர் ஏத்தத்தில் மூச்சு வாங்க அந்த சிறு கால்கள் நடக்கின்றன.

ஏத்தம் முடிந்ததும். மீண்டும் சிறு ஓய்வு, பிறகு நடை இவ்வாறு செல்லும் போது, எதிரே கருப்பையா கோயில் அதனையும் வேண்டிக் கொண்டே ஓடுகின்றான். மெதுவாக வானம் இருளத் தொடங்கியது. குடையும் இல்லை. காலில் செருப்பும் இல்லை. அந்தக் கரடு முறடான ரோட்டில் ஓட்டமும், நடையுமாக வேர்க்க வேர்க்க எல்லா கடவுள்களையும் வேண்டிக்கொண்டுச் செல்கின்றான்.

அம்மாயி இருக்கும் தோட்டத்திற்கு கிட்டத்தில் வந்தபோது, திடீரென மழைப் பெய்யத் தொடங்கியது. பக்கத்தில் இருந்த எண்ணெய் காம்பிராவில் சற்று ஒதுங்கி நிற்கின்றான். “கடவுளே மழை விட்றனும்” என வேண்டிக்கொண்டே நிற்கின்றான். மழை விட்டப்பாடில்லை. அந்த பிஞ்சு மனம் தன் அம்மா சொன்ன விடயத்தையே திரும்ப திரும்ப நினைக்கின்றது. “வீட்டில் ஒன்னுமில்லடா, இப்ப போனாத்தான் ஆறரை மணிக்காவது வரமுடியும்.” மனம் ஒரு முடிவுக்கு வந்தவனாய் அந்த மழையைப் பொருட்படுத்தாமல் ஓடுகின்றான். வழியில் போகின்றவர்கள் மனத்தை பரிதாபமாக பார்ப்பது மனோவிற்குத் தெரிகின்றது.

நனைந்த உடையோடு அம்மாயின் வீட்டை அடைந்த மனத்தை, அவங்க அம்மாயி கட்டியணைத்து, “ஏன்டா இப்படி நனைந்து வார, காச்சக் கீச்ச வந்தா என்னடா செய்வது...” அம்மாயி ஏசிக்கொண்டே தலையை தன் முந்தானையால் துடைத்து விடுகின்றாள். “சாப்பிட்டியா...? தேத்தண்ணிக் குடிச்சியா..?” எனக் கேட்டுக் கொண்டே அம்மாயி ஓடிப்போய் லயத்துக் கடையில் ஆட்டுக்கால் இரண்டை வாங்கி வந்து, “இந்தா, இத தின்னு... நா தேத்தண்ணி ஊத்தித் தாரேன்.” மனோ ஆட்டுக்காலை வாயில் போட்டு மென்று கொண்டே, “அம்மாயி அம்மா வீட்டுல ஒன்னுமே இல்லையென்று சொல்ல சொல்லி சல்லியிருந்தா எவ்வளவு சரி வாங்கிட்டு வரச்சொன்னீச்சு.”

“நா எங்கடா போவேன். நா என்னா தோட்டத்துல, வேலையா செய்றேன். அந்த டீமேக்கர் அம்மா வீட்டுல வேல செஞ்சா, ஏதாவது கொடுப்பாங்க. ஏன்டா ஒங்க அம்மாவுக்கு சம்பளம் இல்லையா? பகல் என்னா சாப்பீட்டிங்க? பகல் ஒரு இறாத்தல் பானை நாலு பேரும் சாப்பிட்டோம். இப்படி எத்தன நாளைக்கு இருக்கப் போறிங்கனு எனக்குத் தெரியல.”

அம்மாயி தன்னுடைய சுறுக்குப் பையில் இருந்த நூறு ரூபாவை கொடுத்து விட்டு, “இந்தா இந்த மூக்குத்தியைத் தாறேன் கொண்டு போய் வச்சு ஏதாவது சாமான் வாங்கச் சொல்லு...” தேத்தண்ணியைக் குடித்த மனோவிற்கு வாழ்க்கையில் எதையோ சாதித்து விட்டது போல் தோன்றியது. கிடைத்தக் காசையும், மூக்குத்தியையும் சேப்பில் வைத்துக்கொண்டு, “அம்மாயி நா போயிட்டு வாறேன்...” “கவனமா போய்யா... நா வந்து விட்டுட்டு வரவடா?” “வேனா அம்மாயி...” “நனையாம இந்தா இந்த கொடய கொண்டு போ...”

அம்மாயின் பாசம் அவனை என்னமோ செய்தது. அந்த முடியாத வயதிலும் அம்மாயி உதவுகிறாள். அம்மாயின் தலை மறைந்ததும் மனோ ஓடுகின்றான். மனோ ஓடி வருவதைப் பார்த்த தாய் ஒரு பெருமூச்சுடி விடுகின்றாள். மனோ கையிலிருந்த காசையும், மூக்குத்தியையும் வாங்கிக் கொண்டு தன் பிள்ளையைப் பார்க்கின்றாள். அதில் ஒரு சோகம் தெரிகின்றது. “கால் வலிக்குதாடா?” தாயின் கண்களிலிருந்து கண்ணீர் பொல பொல வென கொட்டியது. மனோ தாயின் கைகளைப் பிடித்துக் கொண்டான்.

“என்னடா செய்றது நாம வாங்கி வந்த வரம்... “நீ ஏம்மா அழற” மகன் ஆறுதல் சொல்கிறான். தாயும், மகனும் மூக்குத்தியை எடுத்துக் கொண்டு ஈட்டுக் கடைக்குச் செல்கின்றார்கள். ஈட்டுக் கடையில் ஐந்தாறு பேர் நிற்கின்றார்கள். “வாம்மா என்ன விடயம் ஈடுவைக்கவா?” “ஆமாங்க முதலாளி வீட்டுல ஒரு சாமானும் இல்ல.. “அதுக்கு நா என்னம்மா செய்றது. ஏதாவது தங்கச் சாமான் இருந்தா கொண்டு வா காசு தாறேன்...”

தன் கையில் பேப்பரில் சுற்றி வைத்திருந்த மூக்குத்தியைக் கொடுக்க “என்னம்மா இப்ப மூக்குத்தியெல்லாம் வாங்கிறது இல்லையே. இத போய் கொண்டு வந்திருக்க...” “இது ஒன்னுதாங்க இருந்திச்சு...” “ஏம்மா இங்க வந்து ஏ உயிர வாங்குறிங்க...” “என்ன செய்றது. இருக்கததானே கொண்டு வர முடியும்...”

மனோ தாயின் முகத்தை பாவமாகப் பார்க்கின்றான். அம்மாவின் கண்களில் இருந்து கண்ணீர் வழிகின்றது. அதனைத் துடைத்துக் கொண்டு அருகில் இருந்த கடையில் அரிசி, மாவு, சீனி, தேங்காய், மரக்கறி, லாம்பெண்ணை, அப்பாவுக்கு வெத்தல பாக்கு வாங்கிக் கொண்டு கையில் இருந்த காசைக் கொடுக்கின்றாள். “என்னம்மா மிச்சக் காசுக்கு என்னா செய்றது...” “சம்பளம் போட்டு மிச்சத்த தாறேங்க...”

“அதெல்லாம் பொய், இப்ப இங்க இப்படித்தான் சொல்லி வாங்கிட்டுப் போவிங்க, அப்புறம் சம்பளம் போட்டதும் கடை பக்கமே வர மாட்டீங்க...” எல்லோரிடமும் பேச்சு வாங்கும் அம்மாவைப் பார்த்து மனோவிற்கு அழுகையே வந்து விட்டது. தாய் படும் துன்பத்தை அந்த பிஞ்சு இதயம் தாங்க மறுக்கின்றது. வீடுக்கு வரும்போது, இரவு எட்டு மணி. வீடு முழுவதும் இருட்டாக இருந்தது. அப்பா அமைதியாகப் படுத்து இருந்தார். அப்பா வேலைக்கு போவது மட்டும்மதான். வீட்டுப் பொறுப்பெல்லாம் அம்மாதான். அவசர அவசரமாக மனோ லாம்பை பத்த வைக்கின்றான்.

“அம்மா பசிக்குதம்மா” மனோவின் தங்கையின் குரல் கேட்கிறது. “கொஞ்சம் பொருமா... சாப்பாடு தாறேன்...” அன்றைத் தினம் முடிந்து விட்டது. இனி நாளையப் பொழுது? “அம்மா இனி நாம இப்படி கஷ்டப்பட வேணாம்மா..., நம்ம மரக்கறித் தோட்டத்தை செய்வோம். அப்ப நமக்கு கஷ்டம் வராது” என்று மனோ தாயின் மடியில் படுத்துக் கொண்டு சொல்வதைக் கேட்டத் தாய்க்கு வாழ்க்கையில் ஒரு புது தெம்பு கிடைக்கின்றது.

(உண்மைக் கதை)



# ‘தேசாந்தரம்’ குறுநாவல் வெளியீடு

அ . அச்சுதன், ஏ.எச் ஹஸ்பர்

சிரேஷ்ட ஊடகவியலாளர் திருமலை நவத்தின் ‘தேசாந்தரம்’ குறுநாவல் கதிர்.திருச்செல்வத்தின் தலைமையில், நம்மட முற்றத்தின் ஏற்பாட்டில், திருகோணமலை நகரசபை பொது நூலக கேட்போர் கூடத்தில், ஞாயிற்றுக்கிழமை (18) இடம்பெற்றது.

நூலின் முதற் பிரதியைக் கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலக திட்டமிடல் பணிப்பாளர் ஜனாப்.பாயிஸ்க்கு வழங்கி வெளியீட்டு வைக்கப்பட்டது.

நூலுக்கான திறனாய்வினை பொதுச் சுகாதார உத்தியோகத்தர் வ.முரளிதரன் வழங்கினார்.

ஏற்புரையை நூலாசிரியர் திருமலை நவம் வழங்கினார். குறுநாவல் எழுந்த பின்னணி பற்றிக் கூறினார். வெகு விரைவில் தனது நாவல் வெளிவரவுள்ளமை பற்றியும் குறிப்பிட்டார்.



# ‘உப்பு ரொட்டி’ கவிதை நூல் வெளியீடு

அதிபரும் சமூக செயற்பாட்டாளருமான பொன் பிரபாகரனின் ‘உப்பு ரொட்டி’ கவிதை நூல் வெளியீடு, ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர் எம்.மெய்யநாதன் தலைமையில் ஹட்டன் சமூக நல நிலையத்தில் ஞாயிற்றுக்கிழமை (25) வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

தழல் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வில், கவிஞர் சு.தவச்செல்வன் அறிமுக உரையாற்றுவார். மேலதிக கல்விப் பணிப்பாளரும் கவிஞருமான சு.முரளிதரன் நூல் வெளியீட்டு ஆய்வுரையை நிகழ்த்துவார். அரங்கியலாளர் தி.சிவனேசன் கருத்துரை வழங்குவார்.




# விருட்சம் சஞ்சிகை வெளியீடு




அ . அச்சுதன்

‘தளம்’ அமைப்பின் குரலாக, திருக்கோணமலையில் நீண்ட நாட்களாகக் காணப்படும் ‘திருமலை மண்ணின் வெளியீடு’ என்ற இடைவெளியை நிரப்பும் நோக்குடனும் மாதாந்த இதழாக ‘விருட்சம்’ எனும் சஞ்சிகை தளம் அலுவலகத்தில் பெப்ரவரி 01 வியாழக்கிழமை உத்தியோகப்பூர்வமாக வெளியிட்டு வைக்கப்பட்டது. இதன்போது திருக்கோணமலையைச் சேர்ந்த எழுத்தாளர்கள் மற்றும் கலை இலக்கியம் சார்ந்தோர், சமூக நலன் விரும்பிகள், தளத்தின் துகிர், கீற்றுக்கள், தளிர் போன்ற செயல்திட்ட உறுப்பினர்கள் என பலர் பங்கு கொண்டிருந்தனர்.

முற்று முழுதாக இளையோரின் கைவண்ணத்தில் ‘விருட்சம்’ சஞ்சிகை வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



சென்னை

# பஞ்சு மிட்டாய் விற்றால் அபராதம்

கடற்கரைகள், பொழுது போக்கு பூங்காக்கள் உள்ளிட்ட சுற்றுலா தலங்களில் விற்பனையாகும் 'பிங்க் கலர்' பஞ்சு மிட்டாயில் நச்சுத்தன்மை கொண்ட வேதிப்பொருட்கள் கலந்திருப்பது தெரியவந்துள்ளது. இதைத் தொடர்ந்து, அந்த பஞ்சு மிட்டாய்களை உணவு பாதுகாப்பு அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

அப்போது, அதில் உடலுக்கு கேடு விளைவிக்கும் புற்றுநோயை உருவாக்கும் நச்சுப்பொருள் கலப்பது உறுதியானது. இதை தொடர்ந்து, 'பிங்க் கலர்' பஞ்சு மிட்டாய்க்கு தமிழக அரசு தடை விதித்தது.

மேலும், சென்னை மாவட்ட உணவு பொருள் நியமன அதிகாரி சதீஷ்குமார் தலைமையிலான உணவு பொருள் அலுவலர்கள்



சென்னையில் கலர் பஞ்சு மிட்டாய் விற்பனை செய்யப்படுகிறதா? என்பது பற்றி தீவிரமாக ஆய்வு செய்து கண்காணித்து வருகிறார்கள்.

இது தொடர்பாக உணவு பொருள் அதிகாரி சதீஷ் குமார், "உடலுக்கு கேடு விளைவிக்கக்கூடிய 'பிங்க்' நிறத்தில் தயாரிக்கப்படும் பஞ்சு மிட்டாய் சென்னையில் தற்போது எந்த பகுதியிலும் விற்பனை செய்யப்படவில்லை.

கலர் சேர்க்காத வெள்ளை நிற பஞ்சு மிட்டாய் மட்டுமே விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

உடல் நலனுக்கு கேடு விளைவிக்கக்கூடிய கலர் பஞ்சு மிட்டாயை விற்பனை செய்வது கண்டுபிடிக்கப்பட்டால் சம்பந்தப்பட்டவர்களுக்கு ரூ.2 ஆயிரம் அபராதம் விதிக்கப்படும். கலர் பஞ்சு மிட்டாயை தெருக்களில் விற்பனை செய்யும் நபர்கள் அதனை எங்கிருந்து வாங்கி வருகிறார்கள் என்பதை கண்டறியவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சிலர் வீடுகளில் வைத்தே சிறிய மிஷின் மூலமாக பஞ்சு மிட்டாய்களை தயாரித்து வருகிறார்கள். அதில் கலர் சேர்த்தால் அது குற்றமாக கருதப்படும். அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்" என தெவித்துள்ளார்.



புதுடெல்லி

## விவசாயிகள் மீது கண்ணீர் புகை குண்டு வீச்சு


பஞ்சாப் - ஹரியாணா எல்லையில் போராட்டம் நடத்தி வரும் விவசாயிகள் 'டெல்லி சலோ' பேரணியை புதன்கிழமை (21) மீண்டும் தொடங்கியபோது அவர்களைத் தடுத்து நிறுத்த ஹரியாணா பொலிஸார் விவசாயிகள் மீது கண்ணீர் புகை குண்டுகளை வீசினர்.

வேளாண் விஞ்ஞானி சுவாமிநாதன் கமிஷன் பரிந்துரைகளின்படி 23 வகையான பயிர்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை நிர்ணயிக்க வேண்டும். இதை உறுதி செய்து சட்டம் இயற்ற வேண்டும் என்பன உள்ளிட்ட 12 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த 13ஆம் திகதி முதல் விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், ஷம்பு எல்லையில் விவசாயிகளின் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நில அகழ்வு இயந்திரங்கள் மற்றும் புல்டோசர்கள் உரிமையாளர்களுக்கு ஹரியாணா பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஹைதராபாத்

## பற்களை அழகுப்படுத்த சென்ற மணமகன் மரணம்



தனது திருமணத்திற்காக, பற்களை ஒழுங்குபடுத்தும் அறுவை சிகிச்சை செய்துக்கொண்ட லட்சுமி நாராயணா (28) என்பவர் உயிரிழந்த பரிதாபம் ஹைதராபாத்தில் நடந்துள்ளது.

அடுத்த மாதம் நடைபெற இருந்த தனது திருமணத்திற்காக கடந்த 16ஆம் திகதி தனது பற்களை ஒழுங்குபடுத்த பல் மருத்துவமனைக்கு சென்றுள்ளார் லட்சுமி நாராயணா.

பற்களை ஒழுங்குபடுத்தும் அறுவை சிகிச்சையின்போது நாராயணா மயங்கி விழுந்ததாக மருத்துவர்கள் அவரின் தந்தைக்கு தகவல் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து, அருகில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படும் வழியிலேயே லட்சுமி நாராயணா உயிரிழந்துள்ளார்.


அதிக அளவில் மயக்க (Anesthesia) மருந்து அளித்ததாலேயே தனது மகன் உயிரிழந்ததாக மருத்துவமனை மீது அவரின் தந்தை புகார் அளித்துள்ளார். மருத்துவமனையில் உள்ள சிசிடிவி காட்சிகளை ஆராய்ந்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அமெரிக்கா

## அதிர்ஷ்டசாலிக்கு பணம் தர மறுப்பு

அமெரிக்காவின் வொஷிங்டனைச் சேர்ந்த ஜோன் சீக்ஸ் கடந்த ஜனவரி 6ஆம் திகதி பவர்பால் லொட்டரி சீட்டை வாங்கினார். அவர் வாங்கிய லொட்டரி சீட்டுக்கு 340 மில்லியன் டொலர் (இலங்கை மதிப்பில் 105,916,766,000) பரிசு விழுந்திருப்பதாக அறிவிக்கப்பட்டது. லொட்டரி நிறுவனத்தின் இணையத்தளத்தில் சென்று அந்தத் தகவலை உறுதிபடுத்திக்கொண்டார் ஜான்சீக்ஸ்.

இதையடுத்து, லொட்டரி அலுவலகத்தில் தன்னுடைய லொட்டரி சீட்டைக் கொடுத்து,




பரிசுத் தொகையை கேட்டுள்ளார். ஆனால், அவருக்கு பரிசு வழங்க அந்நிறுவனம் மறுத்துள்ளது.

அந்த நிறுவனத்தைச் சேர்ந்த முகவர் ஒருவர், ஜோன் சீக்ஸிடம், "உங்கள் எண்ணுக்கு லொட்டரி விழவில்லை. தவறுதலாக உங்கள் எண் குறிப்பிடப்பட்டு விட்டது. உங்கள் லொட்டரி சீட்டை குப்பையில் போடுங்கள். இனி அது பயனற்றது" என்று கூறியுள்ளார்.

இதனால், ஜோன் சீக்ஸ் மிகுந்த அதிர்ச்சிக்குள்ளானார். இதையடுத்து, தற்போது அந்த லொட்டரி நிறுவனத்துக்கு எதிராக நீதிமன்றத்தை நாடியுள்ளார். இது குறித்து அவரது வழக்கறிஞர் கூறுகையில், "லொட்டரி நிறுவனத்தின் செயல்பாடு அதன் நம்பகத்தன்மை மீது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. ஜோன் சீக்ஸுக்கு அறிவிக்கப்பட்ட தொகையை அந்நிறுவனம் வழங்க வேண்டும் என்று நீதிமன்றத்தில் கோரியுள்ளோம்" என்று தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து

## "போர் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்"



காசா போரை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று வேல்ஸ் இளவரசர் வில்லியம் வலியுறுத்தியுள்ளார்.

பொதுவாக அரச குடும்பத்தை சேர்ந்தவர்கள் அரசியல் நிகழ்வுகள் குறித்து கருத்து தெரிவிக்காமல் இருப்பது வழக்கமாக இருந்து வந்தது. இந் நிலையில், 41 வயதான வேல்ஸ் இளவரசர் வில்லியம் மத்திய கிழக்கு பகுதியில் ஏற்பட்டுள்ள பிரச்சினை காரணமாக பொது மக்கள் பாதிக்கப்பட்டு வருவதையடுத்து, இந்த விவகாரத்தில் தனது நிலைப்பாட்டை அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில், "கடந்த ஆண்டு ஒக்டோபர் 7ஆம் திகதி ஹமாஸ் மத்திய கிழக்கில் நடத்திய தாக்குதல் மற்றும் அதன் பிறகு அங்கு நடைபெறும் சம்பவங்களால் மனித குலம் எதிர்கொள்ளும் இழப்புகளை கண்டு பெரிதும் வருந்துகிறேன். இதில் பலர் கொல்லப்பட்டு விட்டனர்.

நான், மற்றவர்களை போன்றே, இந்த சண்டை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றே நினைக்கிறேன். காசாவிற்கு மனிதாபிமான உதவிகள் அதிகளவில் தேவைப்படுகிறது. உதவிகள் அதிவேகமாக சென்றடைய வேண்டியதும், பணயக்கைதிகள் விடுவிக்கப்பட வேண்டியதும் அவசியம் ஆகும்" என தெரிவித்துள்ளார்.

உக்ரேன்

ரஷ்யாவை சமாளிக்க

## "நீண்ட தூர ஏவுகணைகள் அதிகளவில் தேவை"

உக்ரேன்-ரஷ்யா போர் கடந்த 2 வருடங்களாக தொடர்ந்து நடைபெறுகிறது. இதில் உக்ரேனுக்கு ஆதரவாக அமெரிக்கா, பல ஐரோப்பிய நாடுகள் பொருளாதார உதவிகளை செய்து வருகின்றன. அவற்றின் உதவியால் போரில் உக்ரேன் தாக்குப்பிடித்து நிற்கிறது.

இந் நிலையில், போரால் உருக்குலைந்துள்ள உக்ரேனை மறுசீரமைப்பது தொடர்பான மாநாடு ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெற்றது.

இதில் உக்ரேன் பிரதமர் டெனிஸ் ஷ்மிஹால் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர், "ரஷியாவுக்கு எதிரான போரை முடிவுக்கு கொண்டு வர உக்ரேனுக்கு நீண்ட தூர ஏவுகணைகள் மற்றும் வெடிமருந்துகள் அதிகளவில் தேவைப்படுகிறது. அதேசமயம் ஆயுத ஏற்றுமதி கொள்கையில் ஜப்பானின் கட்டுப்பாடுகளை உக்ரேன் புரிந்து கொள்கிறது. எனவே, அமெரிக்காவின் புதிய இராணுவ உதவிகளை உக்ரேன் எதிர்பார்க்கிறது" என தெரிவித்துள்ளார்.





முதலாவது போட்டியில்

# நியூசிலாந்தை வென்ற அவுஸ்திரேலியா

நியூசிலாந்துக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரில், வெலிங்டனில் புதன்கிழமை (21) நடைபெற்ற முதலாவது போட்டியில் அவுஸ்திரேலியா வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: நியூசிலாந்து

நியூசிலாந்து: 215/3 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: றஷின் றவீந்திர 68 (35), டெவோன் கொன்வே 63 (46), பின் அலென் 32 (17), கிளென் பிலிப்ஸ் ஆ.இ 19 (10), மார்க் சப்மன் ஆ.இ 18 (13) ஓட்டங்கள். பந்துவீச்சு: மிற்செல் மார்ஷ் 1/21 [3])

அவுஸ்திரேலியா: 216/4 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: மிற்செல் மார்ஷ் ஆ.இ 72 (44), டேவிட் வோர்னர் 32 (20), டிம் டேவிட் ஆ.இ 31 (10), கிளென் மக்ஸ்வெல் 25 (11), ட்ரெவிஸ் ஹெட் 24 (15), ஜொஷ் இங்லிஸ் 20 (20) ஓட்டங்கள். பந்துவீச்சு: லொக்கி பெர்கியூசன் 1/23 [4])

போட்டியின் நாயகன்: மிற்செல் மார்ஷ்



கூடைப்பந்தாட்டத்தை ஊக்குவிக்க

## மாணவர்களுக்கு பயிற்சிப் பாசறை

வ. சக்தி

மட்டக்களப்பிலுள்ள பாடசாலை மாணவர்களிடையே கூடைப்பந்தாட்ட விளையாட்டை மேம்படுத்துவதை நோக்காக கொண்ட பயிற்சிப் பாசறை இரண்டு நாட்களாக நடைபெற்றுள்ளது.

மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 10 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கான இந்த கூடைப்பந்தாட்ட பயிற்சிநெறியானது தன்னாமுனை மியானி உள்ளக கூடைப்பந்தாட்ட அரங்கில் மாவட்ட கூடைப்பந்தாட்ட சம்மேளன தலைவர் எந்திரி பார்த்தசாரதி தலைமையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு கூடைப்பந்தாட்ட சம்மேளனம், தேசிய கூடைப்பந்தாட்ட சம்ளேனம் ஆகியன இணைத்து மாவட்டத்தில் கூடைப்பந்தாட்ட விளையாட்டை ஊக்குவிப்பதற்கும் மாகாண மட்ட மற்றும் தேசிய மட்டத்துக்கு வீரர்களைத் தயார்படுத்தும் நோக்கில் இப்பயிற்சிப் பாசறையானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது கூடைப்பந்தாட்ட விளையாட்டு நுணுக்கங்கள் மற்றும் அனுபவங்கள் பயிற்றுவிப்பாளர்களால் பகிரப்பட்டன. இந்நிகழ்வில் பாடசாலை விளையாட்டுத்துறை ஆசிரியர்கள், கிழக்கு பல்கலைக்கழக விளையாட்டு வீரர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இப்பயிற்சிப்பாசறையில் கலந்து கொண்ட பாடசாலை மாணவர்களுக்கு, இதன் நிறைவில் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பார்சிலோனாவிலிருந்து வெளியேறும் கவி?

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனாவின் மத்தியகளவீரரான கவியை கைச்சாத்திடுவதை பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைன் இலக்கு வைத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

எதிர்வரும் 2026ஆம் ஆண்டு வரையில் பார்சிலோனாவுடன் 19 வயதான கவி ஒப்பந்தத்தைக் கொண்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



சம்பியன்ஸ் லீக்:

## அத்லெட்டிகோவை வென்ற இன்டர் மிலன்

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரில், தமது மைதானத்தில் புதன்கிழமை (21) அதிகாலை நடைபெற்ற ஸ்பானிய லா லிகா கழகமான அத்லெட்டிகோ மட்ரிட்டுடனான இறுதி 16 அணிகளுக்கான சுற்றின் முதலாவது போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் இத்தாலிய சீரி ஏ கழகமான இன்டர் மிலன் வென்றது.

மிலன் சார்பாகப் பெறப்பட்ட கோலை மார்கோ அர்னோவிச் பெற்றிருந்தார்.

இதேவேளை, நெதர்லாந்துக் கழகமான பி.எஸ்.வி ஐந்தோவனின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பொரூசியா டொட்டமுண்ட் சமப்படுத்தியது. ஐந்தோவன் சார்பாகப் பெறப்பட்ட கோலை லுக் டி ஜொங் பெற்றதோடு, டொட்டமுண்ட் சார்பாகப் பெறப்பட்ட கோலை டொன்யெல் மலென் பெற்றிருந்தார்.



இங்கிலாந்துக்கெதிரான நான்காவது டெஸ்டிலும்

## லோகேஷ் ராகுல் இல்லை

இங்கிலாந்துக்கெதிரான நான்காவது டெஸ்டுக்கான இந்தியக் குழாமில் லோகேஷ் ராகுல் இடம்பெறவில்லை.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் இரண்டாவது, மூன்றாவது போட்டிகளிலும் உபாதை காரணமாக ராகுல் பங்கேற்காத நிலையில், உடற் தகுதியைப் பெற்றாலே ஐந்தாவது போட்டியில் விளையாடுவாரெனக் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் நான்காவது டெஸ்டில் ஜஸ்பிரிட் பும்ராவுக்கு ஓய்வளிக்கப் பட்டுள்ளது.




விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் வியாழக்கிழமை 22, பெப்ரவரி 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.